# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2336/70 - 2023 ජුනි මස 16 වැනි සිකුරාදා - 2023.06.16

*2336/70 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசு‘‘‘ரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரி கட்டளைச்சட்டம்**

*மதுவரி அறிவித்தல் இல. 01/ 2023*

**இலங்கைக்கு குடிபானமல்லாத ஸ்பிரித்துகளை இறக்குமதி செய்தல் தொடர்பான ஒழுங்குவிதிகளைத் திருத்துதல்**

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், மதுவரி கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2, 12, 22 மற்றும் 25 ஆம் பிரிவுகளின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆம் திகதிய 2075/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 10/2018 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் விதிகளைக் கொண்டு திருத்தப்பட்டவாறான, 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆம் திகதிய 2059/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 07/2018 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலை, 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆம் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், I ஆம் அட்டவணையிலுள்ள 2. ப்ரோபில் மதுசாரம் / ஐசோப்ரொபைல் மதுசாரத்திற்காக மாத்திரம் பொருந்தக்கூடிய இதனகத்தே குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கிணங்க திருத்தியமைக்கின்றேன்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்*
*தேசியக் கொள்கைகள் அமைச்சர்.*

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2023, யூன் 16.*


1A — PG 6402 - 406 (2023/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**விதிகள்**

1. மேற்போந்த 10/2018 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 17 ஆம் விதியைக் கொண்டு திருத்தப்பட்டவாறான IV ஆம் அட்டவணையின் III ஆம் படிவத்தின் 5 ஆம் நிபந்தனையிலுள்ள "7.5 கிலோ கிறாம்" எனும் சொல்லை நீக்கி, I ஆம் அட்டவணையிலுள்ள 2. ப்ரோபில் மதுசாரம்/ ஐசோப்ரொபைல் மதுசாரத்திற்காக மாத்திரம் பொருந்துமாறு "15.0 கிலோ கிறாம்" எனும் சொல்லினைப் பிரதியீடு செய்தல்.

2. மேற்போந்த 10/2018 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 18 ஆம் விதியைக் கொண்டு திருத்தப்பட்டவாறான IV ஆம் அட்டவணையின் III ஆம் படிவத்தின் 6 ஆம் நிபந்தனையிலுள்ள "1000 கிலோ கிறாம்" எனும் சொல்லை நீக்கி, I ஆம் அட்டவணையிலுள்ள 2. ப்ரோபில் மதுசாரம்/ ஐசோப்ரொபைல் மதுசாரத்திற்காக மாத்திரம் பொருந்துமாறு "2000 கிலோ கிறாம்" எனும் சொல்லினைப் பிரதியீடு செய்தல்.

EOG 07 - 0203

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.